**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF II ADDITIONAL DISTRICT JUDGE, THOOTHUKUDI.**

Case No. S.C. No. 12/2023
Prosecution side witness for P.W.14

| | | | |
|---|---|---|---|
| Name | திரு.தங்கபிரபு | Caste | ... |
| Father's/ Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **06.03.2026**

A1absent, U/s. 317 Cr.P.C. petition filed and allowed. A2 present.

**முதல் விசாரணை:-**

நான் பிறந்தது முதல் தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் தாலுகா, உடன்குடி பிறைகுடியிருப்பில் குடியிருந்து வருகிறேன். நான் உடன்குடி - திசையன்விளை ரோட்டில் உள்ள தேரியூரில் ஸ்ரீஅம்பாள் மோட்டார்ஸ் என்ற பெயரில் பழைய வாகனம் வாங்கி விற்கும் தொழில் செய்து வருகிறேன். இந்த வழக்கு சம்மந்தமான வாகனமான TN87 B 8842 என்ற வண்டியை 05.04.2022 ஆம் தேதி முத்துக்குமார் என்பவருக்கு ரூ.55,000/- என்று விலைபேசி ரூ.10,000/-அட்வான்ஸ் பெற்றுக்கொண்டு மேற்படி வண்டியை விற்றுவிட்டேன். அந்த வண்டிக்கு நானே அசல் ஆர்சி புக்கை வைத்து என்னுடைய ஏஜெண்டை வைத்து பைனான்ஸ் செய்து கொடுத்தேன். அந்த வண்டியானது சென்னையில் உள்ள சரவணன் என்பவர் பெயரில் இருந்தது. அந்த வண்டியை வாங்கிய முத்துக்குமார் பெயர் மாற்றம் செய்யவில்லை. அவர் வாங்கிய 10 நாட்களான 14.04.2022 ஆம் தேதியே திருடு போய்விட்டது. அந்த

வண்டியை காணவில்லை என குலசேகரப்பட்டினம் காவல்நிலையத்திற்கு சென்று 10.05.2022 அன்று புகார் கொடுத்திருப்பதாக என்னிடம் வந்து சொன்னார்கள். அந்த வண்டியானது சாத்தான்குளம் காவல்நிலையத்தில் கண்டுபிடித்திருப்பதாக எனக்கு போன் வந்து மேற்படி வண்டியை சென்று பார்த்தேன். அந்த வண்டியில் நம்பர் பிளேட் மாற்றப்பட்டிருந்தது. என்னிடம்இருந்த ஆர்சி புத்தகத்தை வைத்து பார்க்கும்போது அதனுடைய இன்ஞ்சின் நம்பரும், ஜேசிஸ் நம்பரும் சரியாக இருந்தது. அந்த வண்டி யார் திருடி சென்றார்கள் என்று தெரியாது. அந்த வண்டி கொலை வழக்கில் சம்மந்தப்பட்டிருப்பதாக தெரிந்து கொண்டேன். அந்த வண்டியை வைத்து தாவீது என்பரும், டேனியல் என்பவரும் ஒருவரை கொலை செய்துவிட்டதாக காவல்நிலையத்தில் சொன்னார்கள். அந்த வண்டியை காண்பித்தால் என்னால் அடையாளம் காட்ட முடியும். அது கருப்பு சில்வர் கலர் வண்டியாகும். அந்த வண்டியானது அ.சா.பொ.4 ஆக நீதிமன்றத்தில் குறியீடு செய்யப்பட்டதாகும். இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>குறுக்குவிசாரணை (1ம் எதிரிதரப்பில்)</u>

ஸ்ரீஅம்பாள் மோட்டார்ஸ் என்ற நிறுவனம் எனக்கு பாத்தியப்பட்டது என்று காவல்துறையினருக்கு ஏதாவது ஆவணம் சமர்ப்பித்தேனா என்றால் இல்லை. மேற்படி இருசக்கரவாகனத்தை யாரிடமிருந்து வாங்கினேன் என்றால் HDFC ஏலத்தில் ரமேஷ் என்பவர் மூலம் வாங்கினேன். HDFC ஏலத்தில் வண்டியை எடுத்தால் HDFC நிறுவனம் வவுச்சரை ஒப்படைப்பார்கள் என்றால் சரிதான். அந்த HDFC நிறுவனம் வவுச்சர் எனக்கு வழங்கப்படவில்லை என்றால் சரிதான். HDFC நிறுவனத்திடமிருந்து நான் வாகனத்தை பெறாததால் மேற்படி வவுச்சர் என்னிடம் ஒப்படைக்கவில்லை. ரமேஷ் வாங்கியதால் ரமேஷ்

என்பவரிடம் ஒப்படைக்கப்பட்டது. ரமேஷ் என்பவரை விசாரித்தால்தான் HDFC நிறுவனத்திடமிருந்து அவர் ஏலம் பெற்றாரா என்பது தெரியவரும் என்றால் சரிதான். முத்துக்குமார் என்பவருக்கு எந்த நிறுவனம் மூலம் பைனான்ஸ் ஏற்படுத்திக்கொடுத்தேன் என்று போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். முத்துக்குமார் பைனான்சில்தான் வாங்கினாரா என்று பைனான்ஸ் நிறுவனத்தினத்தை விசாரித்தால்தான் தெரியவரும் என்றால் பெரல்பைனான்ஸ் கார்பரேசன் என்ற நிறுவனத்திடமிருந்து முத்துக்குமார் வாங்கினார். பெரல்பைனான்ஸின் வரவு செலவுகளை பார்த்தால் தெரியவரும் என்றால் சரிதான். அவ்வாறு பைனான்ஸில் வாங்கிய ஆவணங்களை எதுவும் போலீசாரிடம் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். முத்துக்குமாரும் வாகனங்களை வாங்கி விற்பனை செய்யும் நபர் என்றால் சரியல்ல. மேற்படி இருசக்கரவாகனம் களவு போன விவரங்கள் எனக்கு எதுவும் நேரடியாக தெரியாது என்றால் சரிதான். முத்துக்குமார் கொடுக்கப்பட்ட புகாருக்கு வழக்கு பதிவு செய்தார்களா என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் முதல்விசாரணையில் சொன்னதுபோல் இன்ஞ்சின் நம்பரும், ஜேசிஸ் நம்பரும் தெளிவாக தெரிந்ததால் அந்த வாகனம் நான் கொடுத்த வாகனம் என்று முடிவுக்கு வந்தேன் என்றால் சரிதான். ஜேசிஸ் நம்பரை அழித்தபிறகு ஓட்டி திரிந்துள்ளார்கள் என்று போலீசார் விசாரணையில் நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். நான் சாத்தான்குளத்திற்கு சென்று நேரடியாக வாகனத்தை பார்த்தேன் என்று போலீசார் விசாரணையில் நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல. இருசக்கரவாகனம் வழக்கில் சம்மந்தப்பட்டுள்ளது என்று போலீசார் சொல்லிதான் எனக்கு தெரியும் என்றால் சரிதான். நான் முதல்விசாரணையில் சொல்லியதுபோல் இருசக்கரவாகனத்தை

முத்துக்குமாருக்கு விலைக்கு நான் கொடுக்கவில்லை என்றாலும், அந்த வாகனம் முத்துக்குமாரிடமிருந்து களவு சென்றுவிட்டதாக சொல்வதும், அந்த வாகனத்தை சாத்தான்குளம் காவல்நிலையத்தில் வைத்து பார்த்ததாக சொல்வதும், நம்பர் பிளேட் மாற்றப்பட்டிருந்ததாக சொல்வதும், போலீசார் சொல்லிக்கொடுத்ததன் அடிப்படையில் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் போலீசாரால் உருவாக்கப்பட்ட சாட்சி என்றால் சரியல்ல.

<u>குறுக்குவிசாரணை (2ம் எதிரிதரப்பில்)</u>

1ம் எதிரிதரப்பு குறுக்குவிசாரணை ஏற்றுக்கொள்ளப்பட்டது.

<u>மறுவிசாரணை இல்லை.</u>

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

II Additional District& Sessions Judge,
Thoothukudi.